2013 ஏப்ரல் 25]

ஊராட்சிப் பகுதிகளாக இருக்கின்றபோது, கிராம ஊராட்சிகளோடு சேர்ந்துவிடுகின்றது. கிராம ஊராட்சிகளோடு சேர்ந்துவிடுகிறபோது அங்கே பேரூராட்சியோ, நகராட்சியோ தலையிட்டு ஒரு வணிக வளாகம் கட்டுவதற்குரிய வாய்ப்பு குறைவாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஆய்வு செய்து அது ஊராட்சிப் பகுதியில் இருந்தாலும்கூட, அந்தப் பேரூராட்சிக்கு அருகில் இருக்கின்ற காரணத்தினாலும், மக்கள் நெருக்கம் கூடுதலாக இருக்கின்ற காரணத்தினாலும், ஊராட்சியின் சார்பாகவேகூட அங்கு ஒரு வணிக வளாகம் கட்டுவதற்குரிய நடவடிக்கை எடுக்கின்ற வாய்ப்பு இருக்கின்றபட்சத்தில், நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 308, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

308—

கல்லூரிக் கட்டடம்

***33423—திரு. என்.வி. காமராஜ்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேதாரண்யத்திலுள்ள பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

முற்பகல் 10—20

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011—2012 ஆம் ஆண்டு நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யத்தில் பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி தொடங்குவதற்கு அனுமதி வழங்கினார்கள்.

[2013 ஏப்ரல் 25

அப்படி அனுமதி வழங்கியதன் காரணமாக, முதலாம் ஆண்டில் 373 மாணவர்களும், இரண்டாம் ஆண்டில் 300 மாணவர்களும் அங்கே படித்து வருகிறார்கள். இக்கல்லூரி தற்போது தற்காலிகமாக வேதாரண்யம்–நாகை சாலையில், கஸ்தூர்பா காந்தி கன்யா குருகுலம் என்ற தனியார் டிரஸ்ட்டிற்குச் சொந்தமான வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்தக் கல்லூரிக்கு நிரந்தரக் கட்டடம் கட்டப்பட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே வினா எழுப்பியுள்ளார்கள். வேதாரண்யம் வட்டம், மகாராஜபுரம், கீழ்பாதி கிராமத்தில் ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தின் கட்டுப்பாட்டிலுள்ள அரசுப் புறம்போக்கு நிலம் புல எண் 637/3, 639 மற்றும் 640–ல் 4.10.0 எக்டேரில், அதாவது 10.13 ஏக்கர் நிலம் மாவட்ட நிருவாகத்தால் தேர்வு செய்யப்பட்டு, நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் மூலம் பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிக்கு நிலமாற்றம் செய்வதற்கான முன்மொழிவுகள் முதன்மைச் செயலர் மற்றும் நில நிருவாக ஆணையருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. முதன்மைச் செயலர் மற்றும் நில நிருவாக ஆணையரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு, கல்லூரிக்கு நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்கு நில மாற்றம் குறித்த அரசாணை விரைவில் வெளியிடப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், கட்டடம் கட்டுவதற்கான தொகையை மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 7 கோடியே 25 இலட்சம் ரூபாய் என நிர்ணயம் செய்துள்ளார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ் அவர்கள்.*

திரு. என்.வி. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தப் புயலிலும் ஆடாது, எத்தனை பொறாமைத் தீயிலும் பொசுங்காது, அத்தனை சூழ்ச்சிகளையும் அடித்து நொறுக்கி, வெற்றிகாணும் பொற்குடமாய் விளங்குகின்ற எங்கள் புரட்சித் தலைவி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

சுதந்திரம் அடைந்து 65 ஆண்டுகள் ஆகியும் கல்லூரியே கண்டிராத, கேட்டிராத வேதாரண்யம் தொகுதி மாணவர்களுக்கு,

2013 ஏப்ரல் 25]

தாங்கள் ஆட்சிக்கு வந்த சில வாரங்களிலேயே பாரதிதாசன் கலை அறிவியல் உறுப்புக் கல்லூரியை கடந்த ஆண்டு தந்தீர்கள் அம்மா! அக்கல்லூரியில் இன்று 90 மாணவர்களும், 572 மாணவிகளும் ஆக மொத்தம் 662 பேர் பயின்று வருகின்றனர். அவர்கள் வாழ்வில் கல்விக் கண் திறந்த வள்ளலாக அம்மா நீங்கள் விளங்குகிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அக்கல்லூரி தற்போது தனியாருக்குச் சொந்தமான வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. தற்போது கல்லூரி இயங்கிவரும் இடத்திற்கு அருகில் கல்லூரிக்கு என்று சுமார் 10 ஏக்கர் அரசு நிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. எனவே, அந்த இடத்தில் கல்லூரிக்கு நிரந்தரக் கட்டடம் கட்டித் தர ஆணையிட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன், அதனை சபையில் அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் பணிவான வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.*

திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக எனது அரூர் தொகுதி, அரூரிலே பெரியார் பல்கலைக்கழகத்தினுடைய உறுப்பு கலைக் கல்லூரியானது அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியிலே தொடங்கப்பட்டு, இரண்டாண்டு காலமாக சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. அந்தக் கல்லூரிக்குப் புதியதாகக் கட்டடம் கட்டுவதற்கு சம்பந்தப்பட்ட துறையினுடைய உயர் அலுவலர்கள், அதிகாரிகளெல்லாம் சென்று பார்வையிட்டிருக்கிறார்கள். வரும் நிதியாண்டிலாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த அரசு கலைக் கல்லூரிக்குப் புதியதாகக் கட்டடம் கட்டுவதற்கு ஆவன செய்வார்களா? இந்த ஆண்டாவது அந்தக் கட்டடப் பணி தொடங்கப்படுமா? எதிர்காலத்தில் புதிய கட்டடத்திலே கல்லூரி மாணவர்கள் பயில்வார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் சட்டமன்றத் தொகுதியில் மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா*

அவர்களால் 2011 ஆம் ஆண்டு வழங்கப்பட்டுள்ள கல்லூரி தற்போது நல்ல முறையில் நடைபெற்று வருகிறது. தற்போது மாணவர்கள் படித்து வருகிறார்கள். அந்தக் கல்லூரி தற்போது அரசு மேல்நிலைப் பள்ளியில் தற்காலிகமாகச் செயல்பட்டு வருகிறது. அங்கே நிலம் கையகப்படுத்தப்பட்டு, நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்கு இந்த ஆண்டு பணிகள் தொடங்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வினா எழுப்பியுள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், மொரப்பூர் range, அரூர் வனக் கோட்டத்தில் 6.103 எக்டேர் வனத் துறைக்குச் சொந்தமான நிலம் இருக்கிறது. இந்த இடம் கல்லூரி அமைப்பதற்கென தேர்வு செய்யப்பட்டுள்ளது. இதற்கு மத்திய வனத் துறை அதிகாரிகள் மற்றும் தமிழக வனத் துறை அதிகாரிகள் முன்னிலையில் சென்னையில் சமீபத்தில் State Advisory Group of Tamil Nadu–ன் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. ஆகவே, வனத் துறைக்குச் சொந்தமான ஓர் இடத்தைத் தேர்வு செய்து, இவ்வளவு குறுகிய காலத்தில் ஒரு கல்லூரிக்கு இடம் கிடைத்தது வரலாற்றில் மிகப் பெரிய முக்கியமான அம்சம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த இடம் அரூரிலிருந்து தருமபுரிக்குச் செல்லும் சாலையிலுள்ளது. திருப்பத்தூர் பகுதியிலிருந்தும் பாப்பிரெட்டிப்பட்டி பகுதியிலிருந்தும், தீர்த்தமலைப் பகுதியிலிருந்தும், தருமபுரி, மொரப்பூர் போன்ற பகுதிகளிலிருந்தும், மாணவ, மாணவிகள் வந்து கல்வி பயின்று வருகின்றனர். இன்னும் சொல்லப்போனால், அந்த இடம் அரூருக்கு மையப் பகுதியிலே அமைந்துள்ள ஒரு நல்ல இடம். இந்தக் கல்லூரிக்குக் கட்டடம் கட்டுவதற்கான தொகையை மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த நிதியாண்டில் 7 கோடியே 25 இலட்சம் ரூபாய் என நிர்ணயம் செய்துள்ளார்கள்; ஆகவே, நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் கூடிய விரைவில் அடிக்கல் நாட்டப்பட்டு, கட்டடம் கட்டப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள்.

2013 ஏப்ரல் 25]

திரு. சி. மைக்கேல் ராயப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புற ஏழை மாணவ, மாணவியரும் உயர் கல்வி படித்துப் பயன்பெற வேண்டுமென்ற குறிக்கோளுடன், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தால், ராதாபுரம் தொகுதிக்குட்பட்ட திசையன்விளையில் நடத்தப்படும் மனோ கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்குச் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா? அந்தக் கட்டடம் கட்டுவதற்கான 2 ஏக்கர் நிலத்தை நானே இலவசமாக வழங்கியுள்ளேன். அதேமாதிரி இந்த மனோ கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்கு தமிழக அரசால் வழங்கப்படுகின்ற விலையில்லா மடிக் கணினியும் வழங்கப்படவில்லை. அதுவும் இந்த ஆண்டு வழங்கப்படுமா என தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திசையன்விளையில் இருக்கக்கூடிய மனோ உறுப்புக் கல்லூரிக்குக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படுமா என்று இங்கே கேட்டதோடு, அதற்கு 2 ஏக்கர் நிலத்தை தானே கொடுத்ததாகச் சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக, அரசால் துவங்கப்படும் உறுப்புக் கல்லூரி என்பது வேறு; பல்கலைக்கழகத்தால் துவங்கப்படுகிற உறுப்புக் கல்லூரி என்பது வேறு. அரசால் தொடங்கப்படும் கல்லூரி என்பது, அரசே அதற்கு நிலத்தைக் கையகப்படுத்தி, கட்டடம் கட்டுவது முதல், ஐந்து ஆண்டுகளுக்கான அனைத்து உதவிகளையும் அரசே செய்யும். பல்கலைக்கழகத்தால் துவக்கப்படும் உறுப்புக் கல்லூரி என்பது, அந்தப் பல்கலைக்கழகத்தின் எல்லைக்கு உட்பட்ட மாவட்டங்களில் மாணவர்கள் உயர் கல்வி பெறவேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில், அந்தப் பல்கலைக்கழகத்தின் சிண்டிகேட் முடிவெடுத்து கல்லூரிகளைத் தொடங்குகிறது. அப்படி அந்தப் பல்கலைக்கழகத்தின் சிண்டிகேட்டே தொடங்குவதால் நிலம் கையகப்படுத்துவதற்கான செலவு, கட்டடம் கட்ட செலவு, கல்லூரி இயங்கத் தேவைப்படும் தொடரும் செலவு, தொடரா செலவு போன்ற செலவுகளையெல்லாம் அந்தப் பல்கலைக்கழகத்தின் நிதியிலிருந்து எடுத்துக்கொள்ள வேண்டும்.*

[2013 ஏப்ரல் 25

தமிழ்நாட்டில் இப்படி இருக்கக்கூடிய கல்லூரிகள், அதிலும் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் சார்பில் மனோ கல்லூரிகள் என்று 6 கல்லூரிகள் இருக்கின்றன. அந்த 6 கல்லூரிகளில், கோவிந்தப்பேரியிலுள்ள சேரன்மாதேவி கல்லூரிக்கு மட்டும் நிரந்தரமாகக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. சங்கரன்கோவிலில் இருக்கக்கூடிய கல்லூரி, பணங்குடியிலே இருக்கக்கூடிய கல்லூரி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்ற திசையன்விளை கல்லூரி, திருநெல்வேலி மாவட்டத்தில் இருக்கக்கூடிய புளியங்குடி கல்லூரி, தூத்துக்குடி மாவட்டத்தில் இருக்கக்கூடிய நாகம்பட்டி போன்ற கல்லூரிகளெல்லாம் மனோ கல்லூரிகள் என்று சொல்லப்படுகின்றன. இந்தக் கல்லூரிகளுக்குக் கட்டடம் கட்ட இடம் இல்லை. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்தக் கல்லூரிக்கு 2 ஏக்கர் நிலம் கொடுக்கப்பட்டதாகச் சொல்லியிருக்கிறார். பொதுவாக கல்லூரிகள் ஆரம்பிக்க, கிராமப்புறமாக இருந்தால், மனோ கல்லூரி ஆரம்பிக்க என்று சொன்னால் குறைந்தது 5 ஏக்கர் நிலம் தேவைப்படும். ஆகவே, இன்னும் 3 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 2 ஏக்கர் நிலம் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களே முன்வந்து, அந்தத் தொகுதியிலுள்ள மாணவர்களின் நலனைக் கருதி, அந்த 3 ஏக்கர் நிலத்தையும் கூடுதலாகக் கொடுத்தால், அதற்குக் கட்டடம் கட்ட பல்கலைக்கழகம்தான் நிதி கொடுக்கவேண்டும். இருந்தாலுங்கூட அந்த மாணவர்களின் நலனைக் கருதி, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று அந்தக் கல்லூரிக்குக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், இந்த மனோ கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்கு மடிக் கணினி (Laptop) வழங்கப்படவில்லை என்ற ஒரு கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். மடிக் கணினி வழங்குகிற ஒரு திட்டத்தை இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தினார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரையில், மூன்று ஆண்டுகளில் மாணவர்களுக்கு மடிக் கணினி வழங்குவதற்காக மட்டும் 4,000 கோடி ரூபாய் நிதி அரசால் ஒதுக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

2013 ஏப்ரல் 25]

பொதுவாக, அரசுப் பொறியியல் கல்லூரிகளில் படிக்கும் மாணவ மாணவியர்களுக்கும், அரசு உதவிபெறும் பொறியியல் கல்லூரிகளில் படிக்கும் மாணவ மாணவியர்களுக்கும், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் படிக்கும் மாணவ மாணவியர்களுக்கும், அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் படிக்கும் மாணவ மாணவியர்களுக்கும், அரசு மற்றும் அரசு உதவிபெறும் பலதொழில்நுட்பக் கல்லூரி மாணவ மாணவியர்களுக்கும், இதுபோன்ற மாணவ மாணவியர்களுக்கும், மடிக் கணினி வழங்கப்படுகிறது. இந்த மனோ கல்லூரிகளுக்கு இதுவரை மடிக் கணினி வழங்கப்படாமல் இருந்தது. ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சட்டமன்றத்தில் இதுகுறித்து வினா எழுப்பியிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தால் நடத்தப்படுகிற இந்த 6 மனோ கல்லூரிகளைப் போன்று நடத்தப்படுகிற கல்லூரி ஒன்று அன்னை தெரசா பல்கலைக்கழகத்தில் உள்ளது. அது பெண்கள் படிக்கக்கூடிய கல்லூரி. அன்னை தெரசா கல்லூரியில் படிக்கக்கூடிய அந்த மாணவர்களுக்கும், மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்கக்கூடிய ஒரு கல்லூரிக்கும், தமிழ்நாட்டிலுள்ள இதுபோன்ற 8 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளுக்கும் இதுவரை Laptop *வழங்கப்படாமல் இருந்தது. இது அரசின் கவனத்திற்கு வந்த பிறகு, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் இந்தக் கல்வியாண்டில் இதுபோன்று 8 கல்லூரிகளில் படிக்கக்கூடிய 3,658 மாணவ, மாணவியர்களுக்கும்* Laptop *வழங்குவதற்கு ஆணைகள் வழங்கியுள்ளார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 309, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*